<u>சார்பு நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்</u>

6.10.2020

OS.No. 6/2016

வா.சா. 1 கே.கே.ராஜு

2020 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 6- ம் நாள் என்பவரின் சாட்சியாக விசாரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டின் 54 வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின்படி திரு.எம்.புஷ்பராணி, பி.ஏ.பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | - கே.கே.ராஜு | ஜாதி | - |
| தந்தை பெயர்; | - | சமயம் | - |
| கிராமம் | - | தொழில் | - |
| தாலூக்கா | - | வயது | - |

<u>குறுக்கு விசாரணை -</u>

கிரையம் செய்து கொடுக்க சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு தாக்கல் செய்த நாளில் நீதிமன்றம் கட்டணம் செலுத்துவதற்கு எனக்கு வசதி இருந்தது. நான் வழக்கு தாக்கல் செய்தபோது ரூ.1000/-க்கான நீதிமன்றம் கட்டணம் தான் செலுத்தியுள்ளேன் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் போதே முழு நீதிமன்ற கட்டணமும் ஏன் செலுத்தவில்லை என்றால் பின் நாளில் கட்டி கொள்ளலாம் என்று இருந்தேன். நான் சொல்வது தவறு என்றாலும், நீதிமன்ற கட்டணம் செலுத்துவதற்கு எனக்கு வசதி இல்லை என்றாலும் சரியல்ல. பாக்கி கிரையதொகையை நீதிமன்றத்தில் 2015 ல் செலுத்தியிருக்கிறேன். 09.02.2016 ல் தான் பாக்கி கிரைய தொகை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்திருக்கிறேன். நான் விவசாயம் செய்கிறேன். புரோக்கர் சரவணன், கிருஷ்ணசாமி மூலமாக பிரதிவாதி நிலத்தை விற்பனை செய்கிறார் என்ற விபரம் தெரியவந்தது. கிரைய ஒப்பந்தம் ஏற்பட்ட தேதியிலிருந்து 2 மாதங்களுக்கு முன்பாக அவ்வாறு சொன்னார்கள். அதற்கு பின்பு நான் சொத்து சம்பந்த வில்லங்கத்தை நான் பதிவாளர் அலுவலகத்தில்

போட்டு பார்த்தேன். வழக்கு ஏதும் நிலுவையில் உள்ளதா என்று விசாரித்து தெரிந்துகொண்டேனா என்றால் பிரதிவாதி வழக்கு நடப்பதாகவும் வழக்கை முடித்து தருவதாகவும் கூறினார். பிரதிவாதி என்ன வழக்கு என்ற விபரத்தை என்னிடம் சொல்லவில்லை. கிரைய உடன்படிக்கை ஏற்படுவதற்கு முன்பாக நிலத்தை நாங்கள் அளந்துபார்க்கவில்லை. ஆனால் இடத்தை சென்று பார்வையிட்டோம். கிரையத்தின்போது அளந்து காட்டுவதாக சொன்னார். தாவா சொத்திற்கான எந்த மூல ஆவணத்தை பார்வையிட்டேன் என்றால் நீதிமன்றத்தின் தீர்ப்பு மட்டும் தான் தாவா சொத்திற்கான ஆவணமாகும். புரோக்கர்கள் நிலம் இருக்கும் விபரத்தை என்னிடம் சொன்னதை நான் வழக்கில் எழுதிபோடவில்லை. பிரதிவாதி வழக்கு இருக்கும் விபரத்தையும், முடித்துகொடுப்பதாக சொன்ன விபரத்தையும் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொத்து சம்மந்தமாக வில்லங்களை நான் சரிபார்க்வில்லை என்றால் சரியல்ல. உடன்படிக்கையின் போது தாவா நிலம் தறிசாக இருந்தது.

(வழக்கறிஞர் கேட்டுகொண்டதன் பேரில் குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)